**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் வியாழக்கிழமை**

**<u>இ.ஏ.எண்.8/2024 ன் இ.பி.எண்.51/2023</u>**

1) எஸ். சுசீலா,

2) எஸ். ரவி,

3) எஸ். சேகர்,

4) எஸ். தேவராஜ்,

5) பூங்காவனம்,

6) பூங்கொடி,

7) ஜெயலட்சுமி,

8) உமாபதி,

9) ஏ. கோபால்,

10) மதன் ராஜ்,

11) குமார் (இறந்தவர்)

12) பானுமதி,

13) மௌரியா,

14) சௌமியா,

15) பத்ரி,

... மனுதாரர்கள் / தீர்ப்புக் கடனாளிகள்

..எதிர்..

திரு. சி. சசிகுமார்,

.... எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

G
BHUVANESWARI

Digitally signed by
G
BHUVANESWARI
Date: 2025.10.28
21:10:13 +0530

இந்த மனுக்களானது 25.08.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது 4ம் மனுதாரர்/4ம் தீர்ப்பாணை கடனாளி தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. மோகன்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் M/s. R. லோகேஷ்வரன், மற்றும் N. தனலட்சுமி, ஆகியோர் ஆஜராகியும், மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு 4ம் மனுதாரர்/4ம் தீர்ப்புக் கடனாளி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 26 விதி 13 151ன் கீழ் வழக்குச் சொத்தை ஆய்வு செய்து, அதை 3 சமமான பங்குகளாக பிரித்து, எஃப்.எம்.பி. வரைபடத்தின் (FMB Sketch) அடிப்படையில் அளவைகளும் எல்லைகளும் (metes and bounds) குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பங்கை மனுதாரர்கள்/தீர்ப்பாணை கடனாளிக்கு ஒதுக்கீடு செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:24 +0530

**2. 4ம் மனுதாரர்/4ம் தீர்ப்புக் கடனாளி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:-**

4ம் மனுதாரர் நிறைவேற்று மனுவில் 4ம் தீர்ப்புக் கடனாளி ஆவார். இறுதித் தீர்ப்பாணையின்படி வழக்குச் சொத்தை ஆய்வு செய்த வழக்கறிஞர் ஆணையர் சொத்தின் விவரங்களை தவறாக அறிக்கையிட்டு, தவறான வரைபடத்தை தயாரித்துள்ளார்.

அவரது அறிக்கையின் படி, தீர்ப்பாணை பெற்றவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 'ஏ' பட்டியல் சொத்து காலியாக இல்லை. மாறாக, அங்கு தீர்ப்புக் கடனாளர்களின் வீடுகள் மின்சார இணைப்புகளுடன் உள்ளன. அதே நேரத்தில், 'சி' பட்டியல் சொத்தே காலியாக உள்ளது. மேலும், சாலையின் அமைவிடம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் எஃப்.எம்.பி. வரைபடம் (FMB Sketch) வழக்கறிஞர் ஆணையரின் வரைபடத்திலிருந்து வேறுபடுகிறது.

நீதிமன்ற அமீனின் வருகைக்குப் பின்னரே மனுதாரர்கள் இந்த முரண்பாடுகளை கண்டறிந்தனர். தீர்ப்பாணை பெற்றவருக்கு காலியான நிலத்தை மாற்றி வைக்க அவர்கள் தயாராக உள்ளனர். எனவே வழக்குச் சொத்தை ஆய்வு செய்து, அதை 3 சமமான பங்குகளாக பிரித்து, எஃப்.எம்.பி. வரைபடத்தின் (FMB Sketch) அடிப்படையில் அளவைகளும்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:29 +0530

எல்லைகளும் (metes and bounds) குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பங்கை மனுதாரர்கள்/தீர்ப்புக் கடனாளிக்கு ஒதுக்கீடு செய்ய உத்தரவிட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் தாக்கல் எதிருரையின் சுருக்கம் :–</u>

வழக்கறிஞர் ஆணையாளரை மீண்டும் நியமிக்க மனுதாரர் ஏதுமான சட்டபூர்வமான காரணத்தைக் காட்டவில்லை. முன்பு, தாலூக்கா அளவை ஆய்வாளரின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு, I.A. எண். 1282 / 2018 இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆணையாளர் அறிக்கை, விரிவானதாக இருந்தது மற்றும் தீர்ப்புக் கடனாளியால் அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. பல வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதும், தீர்ப்புக் கடனாளி தோன்றத் தவறியதால், 07.12.2022 அன்று இறுதித் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

தீர்ப்புக் கடனாளிக்கு பல அடுக்கு கட்டிடம் உள்ளது மற்றும் அதன் பகுதிகள் மூன்றாம் தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. எஃப்.எம்.பி. வரைபடத்தின் (FMB Sketch) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆணையர் அறிக்கை, 'ஏ' பட்டியலில் உள்ள சாலை ஒட்டிய பகுதியை தீர்ப்பாணை பெற்றவருக்கு சரியாக ஒதுக்கீடு செய்துள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:34 +0530

நீதிமன்ற அமீன் ஒப்படைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முயன்ற போது, தீர்ப்புக் கடனாளியின் தடையின் காரணமாக அந்நடவடிக்கை தோல்வியடைந்தது, இதன் விளைவாக தீர்ப்பாணை பெற்றவர் காவல் உதவி மற்றும் தொடர்புடைய உத்தரவுகளைப் பெற முறையீடு செய்ய வேண்டியதாயிற்று. தீர்ப்புக் கடனாளரின் இந்த தற்போதைய மனு, தொந்தரவு தரக்கூடியது, அடிப்படையற்றது மற்றும் நடவடிக்கைகளை தாமதப்படுத்துவதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–**

இம்மனுவில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

**5.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>பிரச்சனை:–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. 4ம் மனுதாரர் நிறைவேற்று மனுவில் 4ம் தீர்ப்புக் கடனாளி ஆவார். மனுதாரர் தரப்பில், இறுதித் தீர்ப்பாணையின்படி வழக்குச் சொத்தை ஆய்வு செய்த வழக்கறிஞர் ஆணையாளர் சொத்தின் விவரங்களை தவறாக

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:39 +0530

அறிக்கையிட்டு, தவறான வரைபடத்தை தயாரித்துள்ளதாகவும், தீர்ப்பாணை பெற்றவரருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 'ஏ' பட்டியல் சொத்து காலியாக இல்லை என்றும் மாறாக, அங்கு தீர்ப்புக் கடனாளர்களின் வீடுகள் மின்சார இணைப்புகளுடன் உள்ளன என்றும் அதே நேரத்தில், 'சி' பட்டியல் சொத்து தான் காலியாக உள்ளதாகவும், சாலையின் அமைவிடம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எஃப்.எம்.பி. வரைபடம் (FMB Sketch) வழக்கறிஞர் ஆணையரின் வரைபடத்திலிருந்து வேறுபடுவதாகவும், நீதிமன்ற அமீனாவின் வருகைக்குப் பின்னரே மனுதாரர்கள் இந்த முரண்பாடுகளை கண்டறிந்ததாகவும் தீர்ப்பாணை பெற்றவருக்கு காலியான நிலத்தை மாற்றி வைக்க அவர்கள் தயாராக உள்ளதாகவும் எனவே வழக்குச் சொத்தை ஆய்வு செய்து, அதை 3 சமமான பங்குகளாக பிரித்து, எஃப்.எம்.பி. வரைபடத்தின் (FMB Sketch) அடிப்படையில் அளவைகளும் எல்லைகளும் (metes and bounds) குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பங்கை மனுதாரர்கள்/தீர்ப்புக் கடனாளிக்கு ஒதுக்கீடு செய்ய உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதைப் பொருத்து எதிர்மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் இ.ம. எண். 1282 / 2018 இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆணையாளர் அறிக்கை, விரிவானதாக இருந்ததாகவும் மற்றும் தீர்ப்புக் கடனாளியால் அதற்கு எந்த மறுப்பும்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:43 +0530

தெரிவிக்கப்படவில்லை என்றும் பல வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதும், தீர்ப்புக் கடனாளி தோன்றத் தவறியதால், 07.12.2022 அன்று இறுதித் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும் எஃப்.எம்.பி. வரைபடத்தின் (FMB Sketch) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆணையாளர் அறிக்கை, 'ஏ' பட்டியலில் உள்ள சாலை ஒட்டிய பகுதியை தீர்ப்பாணை கொண்டவருக்கு சரியாக ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் நீதிமன்ற அமீன் ஒப்படைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முயன்ற போது, தீர்ப்புக் கடனாளியின் தடையின் காரணமாக அந்நடவடிக்கை தோல்வியடைந்ததாகவும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளதை பரிசீலிக்கும் போது அசல் நிறைவேற்று மனுவானது 'அ' அட்டவணை பகுதியில் இருந்து எதிர்மனுதாரர்கள் 1 முதல் 7 வரையானோரை வெளியேறி, அந்த பகுதியின் காலி சுவதீனத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிற நிலையிலும் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் ஏற்கனவே ஆணையர் நியமிக்கப்பட்டு அளித்த வரைபடத்தின் படி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதனை நிறைவேற்றுவதற்காக எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் அசல் நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ள நிலையிலும் எவ்வித ஆவண ஆதாரங்களும் இன்றி இந்த மனுவை மனுதாரர்/ தீர்ப்பு கடனாளி தாக்கல்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:49 +0530

செய்துள்ளது ஏற்கத்தக்கதாக அமைய வில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுவை தள்ளுபடி செய்வதென முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:53 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 21:10:57 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>**
**இ.ஏ.எண்.8/2024 ன்**
**இ.பி.எண்.51/2023**
**நாள் 23.10.2025**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**